


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஜூலை. 01, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 262 ❖ ரூ.10

## டாஸ்மாக் கடைகளில் அரசு ஊழியர்கள் போர்வையில் பிச்சைக்காரர்கள்

# ஆட்டம்

## யாருக்காக மது பிரியர்களிடம் எம்ஆர்பியைவிட பாட்டிலுக்கு கூடுதலாக பத்து ரூபாய் வசூல் செய்கிறீர்கள் நியாயம் கேட்டு போராட்டத்தில் குதித்த பாஜக

**புதுக்கோட்டை, ஜூலை.01**

**புதுக்கோட்டையில் அரசு நிர்ணயித்த விலையை விட அரசு மதுபான கடைகளில் அரசு ஊழியர்கள் மது பாட்டில் ஒன்றுக்கு பத்து ரூபாய் கூடுதல் வசூல் செய்வது கண்டித்து பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று டாஸ்மாக் கடையை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது.**



டாஸ்மாக் கடைகளில் பாட்டிலில் பிரிண்ட் செய்யப்பட்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யபடுவது ஆண்டாண்டுகாலமாக வழக்கத்தில் உள்ளது என்றும் அதற்கு துணை போகும் அதிகாரிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்கிட வேண்டும் என புதுகை வரலாறு தொடர்ச்சியாக தமிழக அரசை வலியுறுத்தி வருகின்றது.

2021ம் ஆண்டுதஞ்சையை சேர்ந்த ராஜேஸ்வரி பிரியா என்பவர் தொடர்ந்திருந்த வழக்கு ஒன்றில், மதுபான கடைகளில் விற்கப்படும் மதுபானங்களுக்கு உரிய ரசீது கொடுக்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக் கிளை கூறியிருந்தது. மதுபானங்களை அதிக விலைக்கு விற்கும் விற்பனை பிரதிநிதிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டு, மதுபானங்கள் விற்பனை குறித்து உரிய விதிமுறை, நீதிமன்ற உத்தரவை முறையாக பின்பற்றப்படவில்லை எனவும் குறிப்பிட்டு, விதிமீறியோர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தமிழக டாஸ்மாக் மேலாண் இயக்குநர் அறிக்கை தாக்கல் செய்ய 2021 ஜனவரி 21ம் தேதி ஆணையிட்டு, அரசு மதுக்கடைகளில் மதுபானங்களின் விலை பட்டியலை வைக்க வேண்டும். மதுக்கடைகளில் விலைப்பட்டியலை வைக்க தவறினால் பிரதிநிதிகள் உட்பட அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கையும் விடுத்து உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ், ஆனந்தி அமர்வு உத்தரவிட்டிருந்தது.

அரசாங்கம் தனது நேரடி கண்காணிப்பில் நடத்தக்கூடிய டாஸ்மாக்கில் நாள் ஒன்றுக்கு கோடிகணக்கான ரூபாய் லஞ்சத்தை மதுபிரியர்களிடமிருந்து ஊழியர்கள் அடாவடியாக வசூலிப்பதையும், அதனால் மதுபிரியர்கள் பாதிக்கப்பட்டு கடைகள் முன்பு ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருவது இன்றுவரையில் தொடந்து கொண்டே தான் இருக்கிறது. லஞ்ச உழலுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் புதுகை வரலாறு ஆட்சியாளர்கள் பார்வைக்கு டாஸ்மாகில் நடக்கும் முறைகேடுகள் குறித்த செய்தியை கொண்டுசெல்வதை வாடிக்கையாக வைத்துள்ளது. ஆட்சி முடியும் நேரத்தில் உயர்நீதிமன்ற உத்தரவை கவனத்தில் கொள்ளாமல் டாஸ்மாக் நிர்வாகத்தின் மீது நடவடிக்கையும் எடுக்க விரும்பாமல் தனக்கு வர வேண்டிய வருவாய் பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் டாஸ்மாக் விற்பனை பிரதிநிதிகள் முதல் மாவட்ட மேலாளர்கள் என யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவர்கள் செய்த ஊழலுக்கு துணை போயி அந்தந்த மாவட்ட அதிமுக அமைச்சர்கள் தேர்தலுக்கான நிதியாக கல்லா கட்டி சென்றனர்.

தற்பொழுது தமிழகத்தில் அனைவரும் எதிர்பார்த்தபடி ஆட்சிமாற்றம் வந்தபிறகும் டாஸ்மார்க் சாமானிய ஏழை-எளிய கூலி தொழிலாளர்களை வஞ்சிக்கும் வகையில் அவர்களின் ரத்தத்தை உறிஞ்சி பாட்டில் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10 ரூபாய் வரை கூடுதலாக அதிமுக ஆட்சியை போல் வசூல் செய்யப்படும் கொடூரம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தமிழகத்தில் எந்த ஒரு டாஸ்மாக் கடைகளில் மதுபாட்டில் வாங்கினாலும் 10 ரூபாய் வரையில் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டிய துர்பாக்கிய சூழ்நிலை உள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்கு எதிராக தாம் ஆட்சி நடத்திவருவதாக கூறும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த விஷயத்தில் ஒரு கணம் யோசித்து குற்றச்சாட்டுக்கு ஆளான அதிகாரிகளை தற்காலிக பணியிடம் நீக்கி மாவட்டம்தோறும் நேர்மையான அதிகாரிகளை நியமனம் செய்து அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பாட்டிலில் உள்ள விலையைவிட ஒரு பைசா கூட கூடுதலாக யாரும் லஞ்சமாக வாங்காத அளவிற்கு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என இந்த அரசை புதுகை வரலாறு 13 மாத காலமாக தொடர்ந்து வலியுறுத்துகின்றது.

மக்களின் நலத் திட்டங்களுக்காக அரசு புதிய திட்டங்களை கொண்டு வரும் போதெல்லாம் அதற்கு மிகப் பெரிய நிதி ஆதாரமாக டாஸ்மாக் நிர்வாகம் இருந்து வருகின்றது. அத்துறையில் தான் மிகப்பெரிய ஊழல் சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பேரிடர் காலத்தில் தமிழக அரசு மிகப் பெரிய நிதி நெருக்கடியில் சிக்கி வரும் வேளையில் டாஸ்மாக் நிர்வாகம் மட்டுமே அரசுக்கு கைகொடுத்து வருகின்றது. இந்த நேரத்தில் கூட மதுபாட்டில் ஒன்றுக்கு ரூபாய் 10 வரை கூடுதலாக லஞ்சம் பெறப்பட்டு வருவது மிகப்பெரிய வேதனையின் உச்சம். இதனை கட்டுப்படுத்த எந்த அதிகாரியும் தயாராக இல்லை. தொடர்ந்து உயர்நீதிமன்ற உத்தரவை உதாசீனப்படுத்தி வருகின்றனர். ஆவின் எப்படியோ அதேபோல்தான் டாஸ்மாக். ஆவினில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட யாரும் கூடுதலாக கேட்பது இல்லை. ஆனால் டாஸ்மாக்கில் மட்டும் ஊழியர்கள் பிச்சை எடுக்கின்றனர்.

புதுகை வரலாற்றின் தீர்க்கமான குற்றச்சாட்டை உள்வாங்கிக்கொண்ட மத்தியில் ஆளும் தேசிய கட்சியான பாரதிய ஜனதா நேற்று திடீரென போராட்டத்தில் இறங்கி புதுக்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் இருக்கக்கூடிய டாஸ்மாக் கடைகளை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டது. புதுக்கோட்டை பாரதிய ஜனதா கட்சி அரசு தொடர்பு பிரிவு மாவட்ட தலைவர் சீனிவாசன் தலைமையில் நடந்த போராட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் செல்வம் அழகப்பன், புதுக்கோட்டை மாவட்ட பார்வையாளர் தேசிய பொதுக்குழு உறுப்பினர் புரட்சி கவிதாசன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் விஜயகுமார்,பார்த்திபன், மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம், மாவட்ட செயலாளர்கள் குரு ஸ்ரீ ராம், சாந்தி முத்து, சிறுபான்மை மாவட்டத் தலைவர் அரசு, விவசாய அணி மாவட்ட தலைவர் ராகவன், பட்டியல் தலைவர் சரவணன், தரவு மேலாண்மை பிரிவு மாநில செயலாளர் கார்த்திக், மாவட்ட தலைவர் ஊடக பிரிவு மாவட்ட தலைவர் சந்துரு, புதுக்கோட்டை நகர பொருளாளர் ஆடிட்டர் பிரசாத், புதுக்கோட்டை நகர பொது செயலாளர் ராமதாஸ், கரம்பக்குடி ஒன்றிய தலைவர் மாரிமுத்து, ஆவுடையார்கோவில் ஒன்றிய தலைவர் ரகுபதி, அரசு தொடர்மாவட்ட துணைத்தலைவர் கோவிந்தராஜ், ராமலிங்க, மாவட்ட செயலாளர் பாலா ரமேஷ்,பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். அவர்களிடம் வழக்கம்போல் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திய போலீசார் எம்ஆர்பியை விட கூடுதல் விலை வசூலிக்காமல் இருக்க எங்களுக்கு ஒரு வாரம் டைம் கொடுங்கள் என்று பாஜகவினரை கெஞ்சி கேட்டதால் பாஜகவினர் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

### அதிமுகவை பின் தொடரும் திமுக

அரசின் கஜானாவிற்கு வராத வருவாயை ஏன் அதிமுகவை போல் திமுகவும் ஆதரிக்கின்றது என்பது தெரியாத புரியாத புதிராகவே இருக்கின்றது. அதிமுகவின் ஊழல் குற்றச்சாட்டுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றதன் மூலம் நல்லாட்சியை தருவார் என்ற நம்பிக்கையில் மக்கள் வாக்களித்து மிகப்பெரிய மக்கள் செல்வாக்குடன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் டாஸ்மாக் நிர்வாகத்தில் நடைபெறும் முறைகேடுகளை களைய இன்றாவது அறிவிப்பு வெளியிட்டு ஊழலுக்கு எதிரானவர் என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் புதுகை வரலாறு தமிழக அரசை வலியுறுத்துகிறது.

### புதுக்கோட்டையில் நாலரை கோடி ரூபாய் மாதம் லஞ்சம்



புதுக்கோட்டை மாவட்டத்தில் 140 கடைகளில் நாள் ஒன்றுக்கு விற்பனையாகும் பாட்டில்களின் சராசரி எண்ணிக்கை ஒரு லட்சத்து 25 ஆயிரம் பாட்டில்கள். ஒரு பாட்டிலுக்கு 10 ரூபாய் என்றால் சராசரியாக 15 லட்ச ரூபாய் நாளுக்கு வசூல் ஆகின்றது. இதை மாதத்தில் கணக்கிட்டால் நாலரை கோடி ரூபாய் சாமானியர்களிடமிருந்து அரசு ஊழியர்களால் வசூல் செய்யப்பட்டு பங்கிட்டு கொள்ளப்படுகிறது. இதையே மாநில அளவில் கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு நூறு கோடி ரூபாயை கடந்து செல்கின்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று இராணிப்பேட்டையில் ரூபாய் 118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி துறை அமைச்சர் காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமை செயலாளர் தயானந்த கட்டாரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மகாராஷ்டிரா முதல்வராக பதவியேற்றார் ஏக்நாத் ஷிண்டே பதவியேற்பு

**மகாராஷ்டிரா , ஜூலை.01**

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சியில் இருந்த சிவசேனா கட்சி தனது சொந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் அதிருப்தியால் ஆட்சியை இழந்தது. இதையடுத்து புதிய முதல்வராக பாஜகவின் தேவேந்திர பட்னாவிஸ் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், உச்சக்கட்ட திருப்புமுனையாக சிவசேனா கட்சியைச் சேர்ந்த அதிருப்தி உறுப்பினர் ஏக்நாத் ஷிண்டே முதலமைச்சராக பதவியேற்பார் என்றும் ஏக்நாத் ஷிண்டேவுக்கு வெளியே இருந்து ஆதரவு தருவதாக அம்மாநில எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான தேவேந்திர பட்னாவிஸ் அறிவித்திருந்தார்.



ஏக்நாத் ஷிண்டே - தேவேந்திர பட்னாவிஸ் இருவரும் இணைந்து மாநில ஆளுநர் பகத் சிங் கோஷியாரியை சந்தித்து புதிய அரசு அமைக்க உரிமை கோரினர். இதன்பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஏக்நாத் ஷிண்டே பேசுகையில்,' 120க்கும் மேற்பட்ட எம்எல்ஏக்கள் இருந்தாலும் முதலமைச்சர் வாய்ப்பை எங்களுக்கு தந்த பாஜகவுக்கு நன்றி. இந்த பெருந்தன்மைக்காக பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோருக்கு நன்றி' என்றார்.

இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தின் புதிய முதலமைச்சராக ஏக்நாத் ஷிண்டே பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் பக்தசிங் கோஷியாரி பதவி பிரமாணம் மற்றும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

## தமிழக அரசு பள்ளிகளில் தற்காலிக ஆசிரியர் பணிநியமனம் ரத்து ? திடீர் அறிவிப்பு !

**சென்னை , ஜூலை.01**

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள 13,391 பணியிடங்களில் தற்காலிகமாக ஆசிரியர்கள் நியமனம் செய்ய இருப்பதாக தமிழக அரசு உத்தரவிட்ட நிலையில், தற்போது அந்த நியமனம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

தமிழகத்தில் உள்ள அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள முதுநிலை ஆசிரியர் பணியிடங்கள் என பல இடங்கள் காலியாக உள்ளது. வழக்கமாக ஆசிரியர்கள் TET தேர்வு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவார்கள். ஆனால் தற்போது தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில் அரசு பள்ளிகளில் காலியாக உள்ள 13,391 ஆசிரியர் பணியிடங்கள் மாணவர்கள் நலன் கருதி தற்காலிகமாக நியமனம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன் படி இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ. 7500, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 10000, முதுகலை ஆசிரியர்களுக்கு ரூ. 12000 என்ற அடிப்படையில் தற்காலிக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த திட்டத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கும், ஆசிரியர் தகுதித் தேர்வு முடித்தவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் ஆசிரியர் நியமனம் அந்தந்த பள்ளி நிர்வாக குழு ஏற்பாடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டது.

எனவே, பல மாவட்டங்களில் பள்ளி நிர்வாக குழுவினர் தங்களுக்கு விருப்பமானவர்களை தேர்வு செய்து ஆசிரியர் பணி நியமனம் வழங்குவதாக புகார்கள் வந்த வண்ணம் இருக்கிறது. இதையடுத்து உடனடியாக இந்த பணி நியமனத்தை நிறுத்த வேண்டும் என திண்டுக்கல் மாவட்டத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பல மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவை பிறப்பித்து இருக்கின்றனர். இந்த விவகாரம் கல்வித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. கல்வித்துறையின் முறையான வழிமுறைகளை பின்பற்றாமல் இந்த நியமனங்கள் நடைபெறுவதாக குற்றசாட்டு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் சங்கத் தலைவர் ஷீலா தொடர்ந்த வழக்கில் தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பது ஆபத்தானது என உயர்நீதிமன்ற மதுரை கிளை கருத்து தெரிவித்துள்ளது.



இம்மாதம் ஜூலை 16,17 தேதிகளில் புதுக்கோட்டை கற்பக விநாயகா திருமண மகாலில் நடைபெறும் தொல்லியல் கழகத்தின் சர்வதேச மாநாட்டிற்கான மூன்றாவது சுற்றறிக்கையை கலெக்டர் கவிதாராமு நேற்று வெளியிட்டார். இந்நிகழ்வின் போது தொல்லியல் ஆய்வுக் கழகத்தின் தலைவர் கரு.ராசேந்திரன் ,மாநாட்டின் உள்ளூர் செயலர் ஆ.மணிகண்டன்,மாநாட்டு நிதிக்குழு தலைவர் ஜி.எஸ்.தனபதி, பேராசிரியர் விஸ்வநாதன்,தொல்லியல் கழக துணைச்செயலர் சை.மஸ்தான் பகுருதீன் ஆகியோர் உடனிருந்தனர்.

## 3 செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–53 ராக்கெட் விண்ணில் பாய்ந்தது

ஸ்ரீ ஹரிகோட்டா ஜூலை.01-

டிஎஸ்-இஓ என்ற புவி கண்காணிப்பு செயற்கைகோள் உள்பட 3 செயற்கைக் கோள்களுடன், பி.எஸ்.எல்.வி. சி-53 ராக்கெட் விண்ணில் விண்ணில் பாய்ந்தது.



ஆந்திர மாநிலம், ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து நேற்று மாலை 6 மணிக்கு இந்த ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. இதற்கான 25 மணிநேர கவுண்ட்டவுன், நேற்று முந்தினம் மாலை 5 மணிக்கு தொடங்கியது.

டிஎஸ் - இஓ செயற்கைகோள் அதிக தெளிவுதிறன் மற்றும் ஒரே நேரத்தில் பல கோணங்களில் பூமியை படம் எடுக்கும் வசதி கொண்டது என்றும், கடல்சார் பாதுகாப்பு, பேரிடர் மீட்பு, பேரிடர் மீட்பிற்கு தேவைப்படும் மனித வளங்களை கண்டறிவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் என்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியில் இருந்து புறப்பட்ட ராக்கெட் 19 நிமிடம் 20 வினாடிகளில் 570 கிலோ மீட்டர் உயரத்தில் சூரிய ஒத்திசைவான துருவ சுற்றுப்பாதையில், திட்டமிட்ட இலக்கில் பிரதான செயற்கைகோள், டி.எஸ்- இ.ஓ. செயற்கைகோள், அதேபோல், நியோ-சாட் மற்றும் சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 2.8 கிலோ எடையுள்ள ஸ்கூப்-1 செயற்கைகோள்களும் வெற்றிகரமாக திட்டமிட்ட இலக்கில் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,683 | Rs.5,082 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் வளாக நேர்காணல்



புதுக்கோட்டை ஜூலை.01-

புதுக்கோட்டை, கைக்குறிச்சி வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக்கல்லூரியில் பிர்லா குழுமத்தின் அவ் டெக் நிறுவனத்தின் வளாக நேர்காணல் நடைபெற்றது. நிகழ்வுக்கு கல்லூரியின் தலைவர் ஆர்.ஏ.குமாரசாமி தலைமை வகித்தார். செயலாளர் பி.கருப்பையா முன்னிலை வகித்தார்.

முதல்வர் ஆர். ஜீவானந்தம், கல்வியியல் கல்லூரியின் முதல்வர் எம். இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அவ் டெக் நிறுவனத்தின் ஹெச்.ஆர்.மேனேஜர் ஆர்.கோபி நிறுவனத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து பின் மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தினார்.

மெக்கானிக்கல், ஆட்டோமொபைல், மெகட்ரானிக்ஸ், எலக்ட்ரிகல் துறையை சார்ந்த 91 மாணவர்கள் நேர்காணலில் கலந்து கொண்டனர். அவர்களில் 24 மாணவர்கள் நேர்காணலில் வெற்றி பெற்று பணி நியமன ஆணைகளை பெற்றனர். முன்னதாக வேலைவாய்ப்பு அலுவலர் திருமலையரசன் அனைவரையும் வரவேற்றார். உதவி அலுவலர் பிரபுதாசன் நன்றி கூறினார்.






# திரிபுராவில் 5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் 22 வயது இளைஞருக்கு தூக்கு

திரிபுரா ஜூலை.01-

5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற 22 வயது இளைஞருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திரிபுரா மாநிலம், ஹொவாய் மாவட்டம், நிஷன் சந்திரபுரா பகுதியை சேர்ந்த 5 வயது சிறுமி கடந்த 2021 பிப்ரவரி 22ம் தேதி வீட்டில் இருந்து மாயமானார். இது குறித்து சிறுமியின் பெற்றோர் போலீசில் புகார் அளித்தனர். புகாரை தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்ட போலீசார் சிறுமியின் வீடு அருகே வசித்து வரும் 22 வயதான அபிஜித் என்ற இளைஞனை கைது செய்தனர். அபிஜித்திடம் நடத்தப்பட்ட விசாரணையில் சிறுமியை வனப்பகுதிக்கு கடத்தி பாலியல் வன்கொடுமை செய்து கொன்று விட்டதாக அதிர்ச்சி தகவலை தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து வனப்பகுதியில் உயிரிழந்த நிலையில் கிடந்த 5 வயது சிறுமியின் உடலை போலீசார் மீட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக அபிஜித் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும், இது தொடர்பான வழக்கு ஹொவாய் மாவட்ட கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், இந்த வழக்கில் அபிஜித் குற்றவாளி என்று கோர்ட்டு நேற்று அறிவித்தது.

மேலும், 5 வயது சிறுமியை கடத்தி பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற குற்றவாளி அபிஜித்திற்கு தூக்கு தண்டனை விதித்து கோர்ட் அதிரடி தீர்ப்பு அளித்துள்ளது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதை தொடர்ந்து குற்றவாளி அபிஜித் சிறையில் அடைக்கப்பட்டார்.

# பா.ஜ.க-வின் ஜனாதிபதி வேட்பாளர் திரௌபதி முர்மு நாளை சென்னை வருகை



சென்னை ஜூலை.01-

பாஜக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திரௌபதி முர்மு நாளை சென்னை வருகிறார்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் முடிவடைவதை தொடர்ந்து ஜூலை 18-ந் தேதி ஜனாதிபதி தேர்தல் நடக்க இருக்கிறது. இதில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் திரௌபதி முர்மு போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய மந்திரி யஷ்வந்த் சின்கா களம் காண்கிறார். இதனால் ஜனாதிபதி தேர்தலில் இரு முனைப் போட்டி உருவாகியுள்ளது. பா.ஜ.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திரௌபதிமுர்முகூட்டணிக் கட்சித் தலைவர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார். அதேபோல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சார்பில் ஜனாதிபதிவேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள யஷ்வந்த் சின்காவும் பா.ஜ.க. அல்லாத பிற கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் நாளை பாஜக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திரௌபதி முர்மு, சென்னை வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. சென்னை வரும் திரௌபதி முர்மு, அதிமுக எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏக்களைச் சந்தித்து ஆதரவு கோர உள்ளார். இதற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது. இந்த சந்திப்பானது நட்சத்திர ஓட்டலில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியை சேர்ந்த 6-ம் வகுப்பு மாணவர் யோகாவில் உலக சாதனை



திருவள்ளூர் ஜூலை.01-

கும்மிடிப்பூண்டியை சேர்ந்த 10 வயது பள்ளி மாணவர் யோகாவில் உலக சாதனை படைத்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியை சேர்ந்த நாகராஜ் - நவநீதம் தம்பதியின் மகன் ரவிகிருஷ்ணா (10). தனியார் பள்ளி ஒன்றில் 6-ம் வகுப்பு படித்து வருகிறார். ரவிகிருஷ்ணா தனது இரு கால்களுக்கு இடையே உடலை முன்னோக்கி வளைத்து பின்புறமாக தலையை மேல் நோக்கி பார்க்கும் பாத குண்டலாசனம் எனும் யோகாசனத்தை, ஒரு நிமிடத்தில் 32 முறை செய்து உலக சாதனை படைத்துள்ளார்.

இவரது சாதனை வேல்ட் வைட் புக் ஆப் ரெக்கார்ட், அசிஸ்ட் உலக சாதனை, இன்டர் நேஷனல் புக் ஆப் ரெக்கார்ட் என 3 உலக சாதனை புத்தகங்களில் இடம் பிடித்துள்ளது. இவரது உலகசாதனையை அவரது பயிற்சியாளர் சந்தியா உள்பட அந்த பகுதி மக்கள் பலரும் பாராட்டினர்.

# கந்தர்வகோட்டையில் பெற்றோர்களால் பாராட்டப்படும் இல்லம் தேடி கல்வி திட்டம்



கந்தர்வகோட்டை ஜூலை.01-

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆடல், பாடல், விழாக்கள், கொண்டாட்டம் என சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் சே.மணிவண்ணன் மற்றும் புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் மஞ்சுளா ஆகியோர் வழிகாட்டுதலின் படியும், கந்தர்வகோட்டை வட்டாரக்கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி ஆலோசனையின் படியும் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஆண்டியபட்டி, நாட்டானி, தட்சங்குறிச்சி, சமுத்திரப்பட்டி கொல்லம்பட்டி, மற்றும் சுந்தம்பட்டி குடியிருப்புகளில் உள்ள இல்லம் தேடி கல்வி மையங்களை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் பார்வையிட்டு கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை உற்று நோக்கினர்.

தன்னார்வலர்கள் நாட்டாணி பாக்கியலட்சுமி, இலக்கியா, ஆண்டியபட்டி தீபா, திருமலைச்செல்வி, சமுத்திரப்பட்டி இளவரசி, தட்சங்குறிச்சி ஆரோக்கிய பிரதீபா, மரியலீனா, கொல்லம்பட்டி அகிலா, முருகேஸ்வரி மற்றும் சுந்தம்பட்டி காஞ்சனா, பிரியா ஆகியோர் மூன்றாம் கட்ட கற்பித்தல் உபகரணங்களைக் கொண்டு தமிழ் மற்றும் ஆங்கில வாசிப்பு பயிற்சி, எளியகணிதசெயல்பாடுகள் போன்றவற்றை உற்சாகத்தோடு கற்பித்து வருகின்றனர்.

பார்வையின் போது, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் இ.தங்கராசு மற்றும் அ.ரகமத்துல்லா ஆகியோர் தன்னார்வலர்களை பாராட்டியதுடன்,

தன்னார்வலர் - பெற்றோர் வாட்ஸ்அப் குழு உருவாக்கம், ஊக்கத்தொகை பெறப்பட்ட விவரம், மையங்களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட விவரம், பள்ளி மேலாண்மைகுழுபங்கேற்பு மற்றும் பள்ளிகளில் உள்ள கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல் போன்ற விவரங்களைக் கேட்டறிந்தனர்.

மாணவர்கள் மாலை நேரத்தில் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும் இல்லம்தேடிகல்விதிட்டம் பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

# கோல்டன் விசா பெற்ற கமல்




▶ ஐக்கிய அரபு அமீரக அரசு இந்திய திரைக்கலைஞர்களுக்கு சிறப்பு கோல்டன் விசாவை வழங்கி வருகிறது.பல திரைப்பிரபலங்கள் இந்த விசாவை பெற்று 10 ஆண்டுகள் அந்நாட்டில் இருக்கலாம் என கூறப்படுகிறது.இந்த வரிசையில் தற்போது நடிகர் கமல்ஹாசனுக்கு கோல்டன் விசாவை ஐக்கிய அரபு அமீரக அரசு வழங்கியுள்ளது.

### அக்னிபத் திட்டத்தில் பணியாற்றும் இளைஞர்களுக்கு

# ஒளிமயமான எதிர்காலம் இருப்பதாக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அறிக்கை



மதுரை ஜூலை.01-

அக்னிபத் திட்டத்தில் பணியாற்றும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்து உள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி உதயகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போது அக்னிபத் திட்டத்தின் மூலம் தேசத்தின் நலனுக்காக இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு உருவாகி உள்ளது. பாரதப் பிரதமர் இளைஞர்களுக்காக 10 லட்சம்வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் அக்னிபத்என்றதிட்டத்தை வெளியிட்டார்.

அக்னிபத் என்பது போர்க்களப்பணி என்பதாகும். இந்த திட்டத்தில் ராணுவம், கடற்படை, விமானப்படை உள்ளது. வரும் 90 நாட்களில் 46,000 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இந்தத் திட்டத்திற்கு 17 முதல் 21 வரை வயது வரம்பு உள்ளது. தற்பொழுது இந்த ஓராண்டுக்கு மட்டும் சிறப்பு நிகழ்வாக 23 வயதாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் பத்தாண்டுகளோ அதற்கு மேலாக பணியாற்ற முடியாது.

இந்த பணியில் 4 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியாற்ற முடியும். அவர்களின் மாத சம்பளத்தில் 30 சதவீத தொகையை பங்களிப்பாக பிடித்தம் செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து பணி நிறைவுக்கு பிறகு அவர்களின் பிடித்தம் செய்யப்பட்ட தொகையுடன் அரசின் பங்களிப்பு தொகைக்கு இணையாக மத்திய அரசு வட்டியோடு சேர்த்து ரூ. 11.71 லட்ச வழங்குகிறது.

இதன் மூலம் இளைஞர்கள் சுயதொழில் தொடங்க முடியும் வாழ்வில் நம்பிக்கை ஆதாரமாக விளங்கும். அக்னிபத் திட்டத்தில் பணியாற்றும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. துணை ராணுவ படைகள், மத்திய, மாநிலபோலீஸ்பணிகளில் வேலைவாய்ப்பு கிடைப்பதுமட்டுமல்லாது, பொதுத்துறைதேர்வுகளில் 10 சதவீதம் பேருக்கு ஒதுக்கப்படவுள்ளது.

சமுதாயத்தில் சிறந்த இளைஞர் படையாக உருவாக வாய்ப்பு உள்ளது. இந்த திட்டம் இளைஞர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். இளைஞர்களுக்கு புரிதல் இல்லாத காரணத்தால் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இளைஞர்கள் இதை முழுமையாக புரிந்து கொண்டு அக்னிபத் திட்டத்தில் சேர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதுரை அருகே ஒருதலைக் காதலால் தற்கொலை செய்த மகனுக்கு இறுதிச் சடங்கு செய்த தந்தை மாரடைப்பால் பலி

மதுரை ஜூலை.01-

மதுரை அருகே ஒருதலைக் காதலால் தற்கொலை செய்த மகனுக்கு இறுதிச் சடங்கு செய்த தந்தை மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

மதுரை, கீரைத்துறை, ஆதிமூலம் பிள்ளை சந்து பகுதியைச் சேர்ந்தவர் கணேசன். இவரது மனைவி சுப்புலட்சுமி. இவர்களது ஒரே மகன் சிவானந்த மணி (21). இவர் திருப்பாலையில் உள்ள தனியார் கல்லூரியில் 2-ம் ஆண்டு படித்து வந்தார். சில வருடங்களாக சிவானந்த மணி அதே பகுதியைச் சேர்ந்த இளம்பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் அந்தப் பெண் அவரது காதலை ஏற்கவில்லை. இதனால் விரக்தியிலிருந்த சிவானந்தமணி கடந்தசில நாட்களாக யாருடனும் சரியாக பேசவில்லை. எதையோ இழந்தது போல் இருந்துள்ளார். கல்லூரிக்கும் செல்லாமல் வீட்டில் இருந்த சிவானந்த மணியிடம் பெற்றோர்கள் உடல் நலம் குறித்து விசாரித்துள்ளனர்.

ஆனால் அவர் எதுவும் இல்லை எனக் கூறி மறுத்துவிட்டார். இந்த நிலையில் காதல் தோல்வியால் விரக்தியின் உச்சத்திற்கு சென்ற சிவானந்த மணி சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் விஷம் குடித்துள்ளார். இதனையடுத்து சிறிது நேரத்தில் மயங்கி விழுந்த அவரை குடும்பத்தினர் மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பலனின்றி சிவானந்த மணி பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து கீரைத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். ஒரே மகன் என்பதால் கணேசனும் அவரது மனைவியும் அதிக பாசம் வைத்து சிவானந்த மணியை வளர்த்தனர். ஆனால் மகனின் திடீர் தற்கொலை அவர்களை கதிகலங்க செய்துவிட்டது. பிரேத பரிசோதனைக்கு பின்னர் மாணவரின் உடலை குடும்பத்தினரிடம் போலீசார் ஒப்படைத்துள்ளனர். அதைத்தொடர்ந்து இறுதிச்சடங்குகள் நடந்தது. சுடுகாட்டில் தான் பாசமாக வளர்த்த மகனின் உடலுக்கு கணேசன் மனதை கல்லாக்கி தீ வைத்தார். இதைத் தொடர்ந்து உறவினருடன் வீட்டுக்கு வந்த கணேசன், சிறு வயதிலேயே மகன் இறந்து விட்டானே என்று புலம்பியுள்ளார்.

அப்போது திடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. வலியால் துடித்த கணேசன் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மகன் இறந்த சோகம் தீராத நிலையில் தந்தையும் மாரடைப்பால் இறந்தது குடும்பத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுகுறித்த தகவல் அறிந்தகீரைத்துறை போலீஸ் இன்ஸ்பெக்டர் பெத்துராஜ் சம்பவ இடத்துக்கு வந்து கணேசனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். காதல் தோல்வியால் மகன் தற்கொலை செய்து கொள்ள, மகனின் சாவை தாங்கிக் கொள்ளாத தந்தை மாரடைப்பால் இறந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பெரியபாளையம் கோவிலில் 130 கிலோ 512 கிராம் பொன் நகைகள் தங்க முதலீடு பத்திரத்தில் ஒப்படைக்கும் நிகழ்ச்சி: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு

ஊத்துக்கோட்டை, ஜூலை01–

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் இந்து சமய அறநிலைத்துறை அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் பக்தர்களால் காணிக்கையாக வரப்பெற்ற பல மாற்றுப் பொன் இனங்களில் திருக்கோவிலுக்கு பயன்படுத்த இயலாத 130 கிலோ 512 கிராம் பொன் இனங்களை சுத்த தங்கமாக மாற்றி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று காலை பெரியபாளையம் பவானி அம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் தலைமை தாங்கினார். இதில்,இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜூ முன்னிலையில் அம்பத்தூர் எஸ்பிஐ வங்கியின் ரீஜனல் மேனேஜர் ராஜலட்சுமியிடம் திருக்கோவிலுக்கு பயன்படுத்த இயலாத பொன் இனங்களை சுத்த தங்கமாக மாற்றி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்ய ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர்,சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்களின் முதன்மை செயலாளர் எம். சந்திரமோகன், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ்,கோவிலின் பரம்பரை அறங்காவலர் அஞ்சன் லோக மித்ரா உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள், கோவிலின் ஊழியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது: இத்திருக்கோவிலில் பொன்நகைகள் முதலீடு செய்ததன் மூலம் ஆண்டுக்கு ரூ.ஒரு கோடி வட்டி வரும் இதன்மூலம் கோவிலின் திருப்பணிகளும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். தற்போது ஒப்படைக்கப்பட்ட பொன் நகைகள் மும்பையில் ஐந்து,ஆறு,ஏழு ஆகிய தேதிகளில் உருக்குவதற்காக தேதி குறித்து உள்ளார்கள். மேலும், இக்கோவிலில் 125 கோடியில் வரைவுத் திட்டம் தயார் செய்யப்பட்டு தமிழக முதல்வரின் ஒப்புதலோடு மூன்று மாதங்களில் பக்தர்களின் வசதிக்கு ஏற்றவாறு பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

18 மாதங்களில் பெரியபாளையம் பவானி அம்மன் கோவில், கங்காதீஸ்வரர் கோவில் உள்பட 3 கோவில்களில் தங்கத்தேர் பவனி நடைபெறும். நவம்பர் மாதத்தில் சிறுவாபுரி முருகன் கோவிலின் கும்பாபிஷேகம் செய்ய சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு கும்பாபிஷேகம் செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.முடிவில், கோவிலின் மேலாளர் வெங்கட் நன்றி கூறினார்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com

### செய்யாறு அருகே 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த

# ஜலகண்டேஸ்வரர் கோவில் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம்



தி.மலை, ஜூலை.1–

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுகாவிற்கு உட்பட்ட கூழமந்தல் கிராமத்தில் சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஜலகண்டேஸ்வரர் கோவிலை புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கூழமந்தல் கிராம இளைஞர்கள் மற்றும் சிவபக்தர்கள் ஒன்று சேர்ந்து முட்புதர்கள் சூழ்ந்து சிதிலமடைந்த நிலையில் இருந்த ஜலகண்டேஸ்வரர் கோவில் கல் மண்டபத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபடும் போது சுமார் 2 அடி உயரம் கொண்ட சிவன் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்த சிவன் சிலையை கூழமந்தல் கிராம இளைஞர்கள், கிராம பொதுமக்கள் மற்றும் சென்னை சிவபக்தர்கள் ஒன்றிணைந்து அதே கல்மண்டபத்தில் சீரமைத்து சிவன் சிலையை பிரதிஷ்டை செய்து சிவ வழிபாட்டு முறையில் சிவவாத்தியம் மற்றும் சங்கு முழங்க சிவ பக்தர்கள் புனித நீரை ஊர்வலமாக கொண்டு சென்று சிவ மந்திரங்களை தமிழில் ஓதியும் சிவன் சிலை மீது புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேக வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. கும்பாபிஷேகத்தின் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் சிவ பக்தர்கள் கலந்துகொண்டு அன்னதானம் வழங்கப்பட்டது.

# சீர்காழியில் உலக கைம்பெண்கள் தினத்தை முன்னிட்டு விதவைப் பெண்கள் வாழ்வுரிமை சங்கம் சார்பில் பேரணி




சீர்காழி, ஜூலை. 1 –

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் உலக கைம்பெண்கள் தினத்தை முன்னிட்டு விதவைப் பெண்கள் வாழ்வுரிமை சங்கம் சார்பில் பேரணி மற்றும் மாநாடு நடைபெற்றது. பேரணிக்கு விதவை பெண்கள் வாழ்வுரிமை சங்க மாவட்ட தலைவர் கஸ்தூரி தலைமை தாங்கினார்.

சங்க நிர்வாகி ஜெயலட்சுமி வரவேற்று பேசினார். பேரணியானது பழைய பஸ் நிலையம், கச்சேரி ரோடு, புதிய பஸ் நிலையம் வழியாக தென்பாதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தை வந்து அடைந்தது. பேரணியின்போது கைம் பெண்களுக்கு தனி நல வாரியம் அமைக்க வேண்டும், கைம்பெண்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியத்தை ரூ 1500 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், வீடு கட்டும் திட்டங்களுக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும், அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு அரசு முன்னுரிமை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கையில் பதாகைகளை ஏந்தி வந்தனர்.

பின்னர் உலக கைம் பெண்கள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாநில துணைத்தலைவி கலைச்செல்வி, பூம்புகார் கல்லூரி உதவி பேராசிரியர் சாந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் நலம் குறித்து வாழ்த்துரை வழங்கினர். இதில் வழக்கறிஞர் தியாகராஜன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் நேதாஜி, விதவைப் பெண்கள் மேம்பாடு திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெசி, விதவைப் பெண்கள் வாழ்வுரிமை சங்க நிர்வாகிகள் மலர்விழி, ஜோதி உள்ளிட்ட ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர். முடிவில் சங்க நிர்வாகி சுகந்தி நன்றி கூறினார்

### ஆரணியில் நியாய விலை கடையில்

# 37 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற விற்பனையாளருக்கு பாராட்டு விழா

*ஊத்துக்கோட்டை, ஜூலை1–*

*திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில்,ஜேஜே98. ஆரணிகூட்டுறவுவிவசாய கடன் சங்கத்தின் சார்பில் நியாய விலை கடை இயங்கி வருகிறது. இதில், விற்பனையாளராக பி.சந்திர கலா என்பவர் 37 ஆண்டுகள் பணியாற்றி வயதுமூப்பின்காரணமாக பணி ஓய்வு பெற்றார்.*

*இந்நிலையில், இவருக்கு பாராட்டு விழாவும்,பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி,பணியாளர் வைப்பு நிதி என மொத்தம் ரூ. எட்டுலட்சத்து 70 ஆயிரம் காசோலை வழங்கும் நிகழ்ச்சி கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,கூட்டுறவு கடன் சங்க தலைவர் ஏ.எம்.தயாளன் தலைமை தாங்கினார். சங்கத்தின் செயலாளர் ராஜசேகர், உதவி செயலாளர் ஆனந்தன், ஆரணி முன்னாள் பேரூர் திமுக செயலாளர் பி.முத்து, ஆரணி பேரூராட்சி முன்னாள் கவுன்சிலர் கு.கரிகாலன், இயக்குனர்கள் புஷ்பலதாலிங்கபாபு, சத்யநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*





*இதில்,1985–ம் ஆண்டு விற்பனையாளராக பணியில் சேர்ந்த சந்திரகலா பல்வேறு தரப்பட்ட பொதுமக்களிடமும், அதிகாரிகளிடமும் அன்புடனும், பண்புடனும் நடந்து கொண்டு அனைவரது பாராட்டியும் பெற்று சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றார். என அனைவரும் அவருக்கு புகழாரம் செலுத்தினர். நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற ஊழியர்கள் கருணாகரன், வெங்கடேசன், ஏகாம்பரம்,திமுகவைச் சேர்ந்த ஆறுமுகம் மற்றும் விற்பனையாளர்கள் சதீஷ், ராமு,ராமுடு,சங்கீதா, ஜெயப்பிரதா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முன்னதாக அனைவரையும் முதுநிலை எழுத்தர் சுகுணா வரவேற்றார். முடிவில், அலுவலக உதவியாளர் வீணா நன்றி கூறினார்.*

# தனியார் கம்பெனி வாகனங்கள், தகுதி சான்று இல்லாமை, அதிகமாக பயணிகள் ஏற்றுதல் சவுடு மண் வாகனங்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் அபராதம்

திருவள்ளூர், ஜூலை.1–

திருவள்ளூர் பகுதியில் இயங்கிவரும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களை ஏற்றி தொழிற்சாலை பணிக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் தகுதி சான்று மற்றும் அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதாக வந்த புகார்களின் அடிப்படையில் திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலர் மோகன் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பன்னீர்செல்வம் மற்றும் மோகன் ஆகியோர் இணைந்து திருவள்ளூர் பகுதியில் அதிரடியாக தணிக்கை செய்தனர்.



அப்போது தனியார் நிறுவனத்திற்காக பயணிகளை ஏற்றிச் செல்லும் நான்கு வாகனங்களை அதிக பயணிகளை ஏற்றி, சாலை வரி கட்டாமல், தகுதி சான்று புதுப்பிக்காத வாகனங்களை பறிமுதல் செய்தனர். அதிகமாக சவுடு மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் லாரிகள் இரண்டையும் பறிமுதல் செய்து அபராதம் தொகையாக 2 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிறுத்தப்பட்டது.

### திருவள்ளூர் மாவட்டத்தில் விஜய் மக்கள் இயக்கம் சார்பில்

# நடிகர் விஜயின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி



திருவள்ளூர், ஜூலை.1–

விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நடிகர் விஜயின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நேற்று திருவள்ளூர் பத்தியால் பேட்டை பகுதியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் எஸ் .விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.டி. மணி, ஒன்றிய தலைவர்கள் ஆனந்தராஜ் (பூண்டி) பி.ஆர் அசார் (திருவள்ளூர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக மாவட்ட தொண்டர் அணி தலைவர் செபஸ்டியன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திரைப்பட இயக்குனர் பேரரசு கலந்து கொண்டு 300 பெண்களுக்கு சேலை, தண்ணீர் குடம் மற்றும் இனிப்புகள் வழங்கி, சிறப்புரையாற்றினார்.

மேலும்திருவள்ளூர் .அரசு பள்ளியில் படித்த பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு சால்வை மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கி பாராட்டி, கவுரவப்படுத்தினார். நிகழ்ச்சிக்குகடம்பத்தூர் ஒன்றிய மாணவரணி செயலாளர் மகேஷ், ஒன்றிய தலைவர் விமல், லலித்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பிரேம் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.டி மணி செய்திருந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கிளை ரெட் கிராஸ் பொதுக்குழு கூட்டம் ஆலங்குடியில் காமராஜர் சிலை அருகில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் புதிய பொருப்பாளர்கள் கௌரவ தலைவர் ஆர். எஸ். ஸ்டனிலாஸ், சேர்மன் டாக்டர் முத்தையா, செயலாளர் முருகன், பொருளாளர் ஜெயச்சந்திரன், துணைத் தலைவர் முத்துராமன், துணை சேர்மன் கே.சி. முருகேசன், துணை செயலாளர் லட்சுமி நாராயணன், பொருளாளர் வி. மீனாட்சிசுந்தரம், நிர்வாக குழு உறுப்பினர்கள் பாஸ்கரன், ஜெரால்டு, ஞானப்பிரகாசம், பாலாஜி, சரவணன் , யோகேஸ்வரன், சரவணன், தர்மராஜ், அஞ்சலை, திருமூர்த்தி, அனைவரும் ஒருமனதோடு ரெட் கிராஸ் உழைப்போம் என்று உறுதிகூறி பதவியேற்று கொண்டார்கள்.

# நெய்குப்பை–மருங்கூர் ஆபத்தான சாலை சீரமைக்கப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

நாகப்பட்டினம், ஜூலை.1–

நெய்குப்பை- மருங்கூர் ஆபத்தான சாலை சீரமைக்கப்படுமா? என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் மருங்கூர்,நெய்க்குப்பை ஊராட்சிகளில் சுமார் 600–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.இந்த ஊராட்சிகளை இணைக்கும் சாலை ஒன்று உள்ளது. இந்த சாலை பாரத பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் 2016-17 நிதியாண்டில் அமைக்கப்பட்டது.இந்த சாலை வழியாக மருங்கூர்,எரவாஞ்சேரி,துறையூர்,கண்ணமங்கலம் ,கொட்டாரக்குடி பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் அன்றாடம் திருமருகல் கடைத்தெரு,வங்கி,ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக வந்து செல்கின்றனர்.



மேலும் மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த பள்ளி கல்லூரி மாணவ-மாணவிகள் நாகை, காரைக்கால், நன்னிலம் பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு இந்த சாலை வழியாக சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்று வருகின்றனர். இந்த நிலையில் மருங்கூர்–நெய்க்குப்பை இடையே சாலையில் ஜல்லி கற்கள் பெயர்ந்து ஆபத்தான பள்ளங்கள் உள்ளது.இரவு நேரங்களில் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் பள்ளம் இருப்பது தெரியாமல் கீழே விழுந்து விபத்துக்குள்ளாகி கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரை பள்ளங்களை சரி செய்து தரவில்லை என அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனவே உயிர் இழப்புக்கள் ஏற்படும் முன்னர் மருங்கூர்–நெய்க்குப்பை சாலையில் ஆபத்தான நிலையில் உள்ள பள்ளங்களை சீரமைத்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாசி



மயிலாடுதுறை, ஜூலை.1–

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியின் பவள விழா நிகழாண்டு ஒவ்வொரு மாதமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில், கல்லூரியின் கமலை ஸ்ரீஞானபிரகாசர் நிலையத்தில் நடைபெற்ற பவளவிழா ஜூன் 2022–இல் தருமபுரம் ஆதீனம் 27–வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையேற்று, அருளாசி வழங்கிப் பேசுகையில், தனக்கு ஆன்மீகத்தில் சிறு வயதிலிருந்தே ஆன்மீக சிந்தனை மேலோங்கியிருந்த காரணத்தால் சுவாமி விவேகானந்தர் போன்று ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி தோன்றும். அதேபோல் விமானத்தில் அமெரிக்கா செல்ல வேண்டும் என்ற ஆவலும் சிறுவயதிலேயே உண்டு.

அதேபோல ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னர், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு ஆன்மீக பயணம் மேற்கொண்டதாகவும், மாணவர்கள் அனைவரும் தங்களது இலக்கினை நிர்ணயித்துக்கொண்டு பயணித்தால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்றார். விழாவில், கல்லூரியின் முன்னாள் மாணவரும், தொலைக்காட்சி புகழ் ஈரோடு மகேஷ், நாகை சர் ஐசக் கல்லூரியின் செயலர் ஆனந்த் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று, 'பவளம்" செய்தி மடலை வெளியிட்டு, கல்லூரி மாணவிகளுக்கு இலவச தையல் இயந்திரங்களை வழங்கிப் பேசினர். தொடர்ந்து லயன்ஸ் சங்கம் சார்பில் கல்லூரி வளாகத்தில் மரம் நடும் நிகழ்வு நடைபெற்றது.

# சீர்காழியில் ரோட்டரி சங்க வெள்ளி விழா மற்றும் முதல் தளம் கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆளுநர் பங்கேற்பு

சீர்காழி, ஜூலை.1–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் ரோட்டரி சங்க வெள்ளி விழா மற்றும் சங்க கட்டிட முதல் தளம் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு ரோட்டரி சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

உதவி ஆளுநர் வைத்தியநாதன், சாசனத் தலைவர் பால வேலாயுதம், பொருளாளர் ராகுல் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் பாஸ்கரன் வரவேற்று பேசினார். விழாவில் சங்க கட்டிட முதல் தளத்தை மாவட்ட ஆளுநர் பாலாஜி திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். பின்னர் வெள்ளிவிழா மலரை மாவட்ட நிர்வாகி கேதார்நாதன் வெளியிட்டு பேசினார்.




முன்னதாக சீர்காழி நகர மன்ற தலைவர் துர்கா ராஜசேகரன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து சிறந்த ஆசிரியர், சமூக சேவகர் உள்ளிட்ட பல்வேறு துறை சேர்ந்த நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ரோட்டரி சங்க தலைவர்கள் சுப்பிரமணியன், சுசீந்திரன், கல்யாணசுந்தரம், திருநாவுக்கரசு, எஸ். எஸ். சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் செயலாளர் கணேஷ் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் 3 நாட்களுக்கு கனமழை தொடரும்: வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூலை.1–

தமிழகத்தில் 3 நாட்களுக்கு கனமழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழகத்தில் 2ம் தேதி வரை மேற்கு திசை காற்றின் வேகமாறுபட்டால் கனமழை தொடரும். இன்று நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருக்கிறது. நாளை நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ராணிப்பேட்டை,



திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுச்சேரி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நாளை மறுநாள் கனமழை பெய்யக்கூடும். ஜூலை 3,4 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காரணப்படும், ஒருசில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. ஜூலை 2 வரை லட்சத்தீவு, கர்நாடகா, கேரளா, தென் கிழக்கு, மத்திய கிழக்கு அரபிக்கடலில் பலத்த சூறாவளி வீசக்கூடும்.

குமரிக்கடல், மன்னார் வளைகுடா, தென் தமிழகம், இலங்கை கரையோரம் பலத்த காற்று வீசக்கூடும். 40–50 கி.மீ. வேகத்தில் பலத்த சூறாவளி வீச வாய்ப்புள்ளதாக மீனவர்களுக்கு அடுத்த 3 நாட்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

# ஓபிஎஸ் அதிமுக ஒருங்கிணைப்பாளரே கிடையாது பொருளாளர் தான் ஈபிஎஸ் கடிதம்



சென்னை ஜூலை.01–

ஓ.பன்னீர்செல்வம் அதிமுக ஒருங்கிணைப்பாளரே கிடையாது. பொருளாளர் மட்டும்தான் என்று தலைமை நிலையச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.

எடப்பாடிபழனிசாமிக்கு ஓ.பன்னீர்செல்வம் கடந்த 29ஆம் தேதி உள்ளாட்சி இடைத்தேர்தல் வேட்பு மனுதாக்கல் தொடர்பாக கடிதம் எழுதியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் விதத்தில் ஓ.பன்னீர்செல்வத்திற்கு எடப்பாடி பழனிசாமி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் நீங்கள் தற்போது அதிமுக ஒருங்கிணைப்பாளர் இல்லை என்று எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார். ஒருங்கிணைப்பாளர் என்ற உணர்வில் தாங்கள் எழுதிய கடிதம் செல்லத்தக்கதல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 23ஆம் தேதி நடந்த பொதுக்குழுவில் சட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படாததால் ஒருங்கிணைப்பாளர் பதவி காலாவதியாகிவிட்டது என்று குறிப்பிட்டுள்ள பழனிசாமி தன்னை தலைமை நிலைய செயலாளர் என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் அருகே பாலியல் வழக்கில் ஜாமீனில் வெளிவந்த டிரைவர் வெட்டிக் கொலை



தி.மலை ஜூலை.01–

திருவண்ணாமலை அருகே பாலியல் வழக்கில் ஜாமீனில் வெளிவந்த டிரைவர் படுகொலை செய்யப்பட்டு உள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் தாலுகா, பாண்டியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன் (33). தனியார் பஸ் டிரைவர். இவருக்கு மனைவி மற்றும் 3 மகன்கள் உள்ளனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு முருகன் தனது உறவினர் மகளான 16வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கைதாகி சிறையில் இருந்தார்.

இந்நிலையில் கடந்த 23-ம் தேதி இந்த வழக்கில் இருந்து டிரைவர் முருகன் ஜாமீனில் வெளியே வந்துள்ளார். வீட்டில் இருந்த முருகன் நேற்று காலை 7 மணிக்கு வீட்டின் பின்புறம் உள்ள மாந்தோப்புக்கு சென்றுள்ளார். அப்போது அங்கு பதுங்கியிருந்த சிறுமியின் உறவினர்கள் டிரைவர் முருகனை கத்தியால் சரமாரியாக வெட்டினர். வலியால் துடித்த முருகனின் அலறல் சத்தம் கேட்டு அப்பகுதியினர் ஓடிவந்தனர்.

இதனால் சிறுமியின் உறவினர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். பின்னர், ரத்த வெள்ளத்தில் கிடந்த முருகனை மீட்டு சிகிச்சைக்காக செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி முருகன் உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த தூசி போலீசார் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆலங்குடி பணிமனை முன்பு சிஐடியு சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



ஆலங்குடி ஜூலை.01–

ஆலங்குடி பணிமனை முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் மத்திய சங்க துணை தலைவர் மெய்யராம் தலைமையில் நடைபெற்றது. சங்க துணை பொருளாளர் சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார்.

14-வது ஊதிய ஒப்பந்தத்தை உடனடியாக பேசி தீர்க்க வேண்டும், ஓய்வு பெறும் தொழிலாளியை வெறுங்கையோடு அனுப்பாதே, ஓய்வு பெற்ற தொழிலாளிக்கு 80 மாத டிஏ உடனடியாக வழங்க கோரியும், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு 11 ஆயிரம்கோடி பலன்களை உடனடியாக வழங்க கோரியும், போக்குவரத்து கழகத்தினுடைய சுழல் முறை பேச்சை உடனடியாக அமல்படுத்த கோரியும், போக்குவரத்து கழகத்தில் உள்ள வரவு செலவு வித்தியாசத்தை உடனடியாக வழங்க கோரியும், கழகங்களில் உள்ள காலாவதியான பேருந்துகளை நீக்கிவிட்டு புதிய பேருந்துகளை உடனடியாக வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேலும் பொதுப் போக்குவரத்து பணியை செய்திட ஆள் பற்றாக்குறை உள்ளதை உடனடியாக சரி செய்திட வேண்டும். அதிகாரிகளின் அடாவடி தனத்தை கண்டித்தும், ஆளுங்கட்சிக்கு துணை போகும் அதிகாரிகளை கண்டித்தும் சிஐடியு சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிஐடியு ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன் ஆர்ப்பாட்டம் குறித்து சிறப்புரையாற்றினார். தையல் சங்கத் தலைவர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு பாண்டியன் நன்றி கூறினார்.

# முகப்பேரில் பள்ளி மாணவிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஆசிரியர் போக்சோவில் கைது



சென்னை ஜூலை.01–

முகப்பேரில் உள்ள அரசு பள்ளியில் மாணவிகளிடம் தொடர் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஆசிரியர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

சென்னை, அண்ணாநகர் மேற்கு பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீதர் ராமசாமி (45). இவர் முகப்பேரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 வகுப்பு வேதியியல் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். கொரோனா ஊரடங்கு அமலில் இருந்த நேரத்தில் ஆன்லைன் வகுப்புகள் நடைபெற்று வந்ததால், ஸ்ரீதர் தான் வகுப்பு எடுத்த பள்ளி மாணவிகளின் செல்போன் எண்கள் அனைத்தையும் அவரது செல்போனில் சேமித்து வைத்திருந்தார். இந்த நிலையில், அவர் மாணவிகளுக்கு வாட்ஸ்-அப்பில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக கூறப்படுகிறது.

மேலும் மாணவிகளை படிப்புக்கு தொடர்பு இல்லாமல் அடிக்கடி செல்போனில் அழைத்து பேசியதாக தெரிகிறது. இந்த நிலையில் ஊரடங்கு தளர்வுகளுக்கு பின் நேரடி வகுப்புகள் தொடங்கியதையடுத்து, அவரின் அத்துமீறல்கள், சீண்டல்கள் அதிகரித்ததாக கூறப்படுகிறது. ஆசிரியரின் அத்துமீறல்களை வெளியே சொன்னால் படிப்பு பாதிக்கப்படுவதோடு எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுமோ? என்ற அச்சத்தில் மாணவிகள் வெளியே சொல்ல முடியாமல் தவித்து வந்ததாகவும் தெரிகிறது.

தற்போது பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 வகுப்பு தேர்வுமுடிவுகள் வெளிவந்த நிலையில் ஆசிரியர் ஸ்ரீதர் ராமசாமியால் பாதிக்கப்பட்ட மாணவிகள் குழந்தைகள் நல அலுவலரிடம் துணிச்சலுடன் முறையிட்டனர். அதன்படி திருமங்கலம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் விசாரணையில் ஆசிரியர் ஸ்ரீதர், மாணவிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து அவர் மீது போலீசார் போக்சோ பிரிவு உட்பட பல பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து கைது செய்து விசாரித்து வருகின்றனர்






### சென்னையில் மனைவியின் கள்ளக்காதல் விவகாரத்தில்

# நண்பரை கொலை செய்த ஆட்டோ டிரைவருக்கு ஆயுள் தண்டனை

சென்னை ஜூலை.01–

மனைவியுடன் ஏற்பட்ட கள்ளக்காதல் விவகாரத்தில் நண்பரை கொலை செய்த ஆட்டோ டிரைவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்தவர் தங்ககுமார் (29). அம்பத்தூரில் உள்ள தனியார் கம்பெனியில் லோடு ஆட்டோ ஓட்டி வந்தார். இவரது நண்பர் கார்த்திக்ராஜா (26). இவர் தங்ககுமார் வீட்டிற்கு அடிக்கடிவந்துசென்ற நிலையில்அவரதுமனைவியுடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில் ஆத்திரத்திரமடைந்த தங்ககுமார், கடந்த 2015-ம் ஆண்டு அம்பத்தூர் எஸ்டேட் பகுதியில் குடிபோதையில் இருந்த கார்த்திக்ராஜா மீது கல்லை போட்டு கொலை செய்துள்ளார்.

இந்த வழக்கில் தங்ககுமாரை அம்பத்தூர் எஸ்டேட் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த நிலையில், இந்த வழக்கு பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி முருகேசன் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார். இதில் தங்ககுமார் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால் கொலையாளியான அவருக்கு ஆயுள் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். மேலும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் 6 மாத காலம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். இதையடுத்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தங்ககுமாரை போலீசார் அழைத்து சென்று சிறையில் அடைத்தனர்.

### சென்னை பெருங்குடியில்

# கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்த 2 தொழிலாளர்கள் விஷவாயு தாக்கி பலி



சென்னை ஜூலை.01–

பெருங்குடியில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்த 2 தொழிலாளர்கள் விஷவாயு தாக்கி உயிரிழந்தனர்.

சென்னை பெருங்குடியில் அடுக்குமாடி குடியிருப்பிலுள்ள கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் 2 தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். அப்போது 2 தொழிலாளர்களையும் விஷவாயு தாக்கியது. இதனை அறிந்த அப்பகுதியினர் விரைந்து வந்து கழிவுநீர் தொட்டியில் சிக்கி இருந்த 2 தொழிலாளர்களையும் மீட்டு வெளியே கொண்டு வந்தனர். இதில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றொரு தொழிலாளி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அவரும் தற்போது உயிரிழந்து உள்ளார்.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் விரைந்து வந்து உயிரிழந்த தொழிலாளர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து பெருங்குடி அடுக்குமாடி குடியிருப்பில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

### 2-ம் நிலை காவலர் பணிகளுக்கு

# வரும் 7-ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என சீருடை பணியாளர் தேர்வாணையம் அறிவிப்பு



சென்னை ஜூலை.01–

தமிழகத்தில் 2-ம் நிலை காவலர் பணிகளுக்கு வரும் 7-ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என சீருடை பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

தமிழக காவல்துறையில் உள்ள 3,552 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்கு, வருகின்ற ஜூலை 7-ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு குழுமம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ் நாடு சீருடை பணியாளர் தேர்வு குழுமத்தின் தலைவரும், டிஜிபியுமான சீமா அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழக காவல்துறையில் 3,552 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்கள் காலியாக உள்ளது. அதில், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, இரண்டாம் நிலை சிறைக் காவலர், தீயணைப்பாளர் பணியிடங்களுக்கான அறிவிப்பு இன்று வெளியிடப்படுகிறது.

இந்த தேர்வு எழுத விரும்பும் இளைஞர்கள், ஜூலை 7-ஆம் தேதி முதல் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு குழுமத்தின் www.tnusrb.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். இந்த தேர்வுக்கு இந்த இணையத்தளத்தின் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். தேர்வுக்கு ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். காவலர் தேர்வில் முதல் முறையாக பொதுத் தேர்வுடன் தமிழ் மொழித் தகுதித் தேர்வும் அரசு வழிகாட்டுதலின்படி நடத்தப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு சீருடை தேர்வு குழும அலுவலகத்திலும், அனைத்து மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், மாநகர காவல் ஆணையர் அலுவலகம் ஆகிய இடங்களில் உதவி மையங்கள் ஜூலை 7-ம் தேதி முதல் செயல்படும். இந்த உதவி மையங்கள் வாரத்தின் 7 நாள்களும் செயல்படும். இந்த உதவி மையத்தை விண்ணப்பதாரர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# ராணிப்பேட்டை அரசுப் பள்ளியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு



ராணிப்பேட்டை ஜூலை.01–

ராணிப்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆம்பூர் வருகை தந்தார். நேற்று முன்தினம் திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலக திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, வேலூர் பஸ் நிலையம் திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரவு ராணிப்பேட்டை வருகை தந்தார். அங்கு பாரதிநகரில் உள்ள ஜி.கே.ரெசிடென்சியில் தங்கினார்.

இந்நிலையில் நேற்று காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராணிப்பேட்டை பாரதி நகரில் ரூ.118.40 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை திறந்துவைத்தார். இந்நிலையில் ராணிப்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். வகுப்பறையில் இருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் கலந்துரையாடினார். அங்குள்ள அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் தேவைகள் குறித்து அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். மாணவர்களிடம் படிப்பதற்குரிய சூழ்நிலைகள், தேவைகள் குறித்து கலந்துரையாடினார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கு செல்லும் போதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு மேற்கொள்ளுவது வழக்கமாக இருக்கிறது. அந்த வகையில் ராணிப்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டு வகுப்பறையில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்தார். அங்குள்ள தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பாக

# காய்ச்சல் கண்காணிப்பு மற்றும் கொரோனா விழிப்புணர்வு மருத்துவ முகாம்



புதுக்கோட்டை ஜூலை.01–

முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் காய்ச்சல் கண்காணிப்பு மற்றும் கொரோனா விழிப்புணர்வு சிறப்பு மருத்துவ முகாம் டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பாக புதுக்கோட்டை, தோப்புக்கொல்லை அகதிகள் முகாமிலுள்ள ஆரம்பப்பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது.

முகாமிற்கு தோப்புக்கொல்லை ஊராட்சி மன்றத்தலைவர் ஜெயசீலன் தலைமை தாங்கினார். கொரோனா நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பற்றியும் காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல் வலி, வாந்தி, எலும்பு வலி ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவனைகளை அணுக வேண்டும் என்றும் முகாமில் அறிவுறுத்தப்பட்டது. டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் சூர்யபிரகாஷ் அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார். முகாமில் இரத்தத்தில் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டது.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப் செய்திருந்தார். முடிவில் காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் சக்திவேல் அனைவருக்கும் நன்றி கூறினார்.



▶ தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் ஐந்தாவது நகர்மன்ற கூட்டம், கடையநல்லூர் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் தலைமையில் நடைபெற்றது. இதில் 30 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது வார்டுகளில் உள்ள பிரச்சனைகளை காரசாரமாக விவாதித்தனர். குடிதண்ணீர், சாக்கடை வாருகால், குளம் மராமத்து, தெப்பக்குளம் தூர்வாருதல், மேலும் டெண்டர் விட்டதில் பிரச்சனை என அனைத்து பிரச்சனைகளுக்கும் உடனுக்குடன் தீர்வு காணப்படும் என்று நகர் மன்ற தலைவர் உறுதி கூறினார். மாமன்ற உறுப்பினர்களுக்கு நகர்மன்ற ஆணையர் வரவு-செலவு, ஒப்பந்த புள்ளிகள் சம்பந்தமான விளக்க உரை ஆற்றினார். நேற்று நடைபெற்ற கூட்டத்தொடரில் 32 வது வார்டு திமுக உறுப்பினர் குடிபோதையில் ஒருமையில் பேசி கூட்டத்தை திசை திருப்பினார்.

# ஆந்திராவில் ஆட்டோ மீது மின் கம்பி அறுந்து விழுந்த விபத்தில் 8 பேர் உடல் கருகி பலி



ஆந்திரா ஜூலை.01–

ஆட்டோ மீது உயர் மின் அழுத்த கம்பி விழுந்ததால் ஏற்பட்ட தீ விபத்தில் பயணிகள் 8 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலம், சத்யசாய் மாவட்டம், தடிமரி பகுதியில் உள்ள சிலகொண்டையாபல்லி கிராமத்தை சேர்ந்த சிலர் விவசாய பணிக்காக ஆட்டோவில் நேற்று காலை சென்று கொண்டிருந்தனர். ஆட்டோவில் மொத்தம் 8 பேர் பயணித்தனர். ஆட்டோ கிராமத்தை தாண்டி சென்று கொண்டிருந்த போது மேலே சென்று கொண்டிருந்த உயர் மின் அழுத்த கம்பி ஆட்டோ மீது விழுந்தது. இதனால், ஆட்டோ முழுவதும் மின்சாரம் பாய்ந்து உடனடியாக தீப்பற்றியது. இதனால், ஆட்டோவில் இருந்த அனைவர் மீதும் மின்சாரம் பாய்ந்து தீப்பற்றியது.

ஆட்டோவில் இருந்து இறக்க முயற்சித்தபோதும் தீ வேகமாக பரவியதால் பயணிகள் ஆட்டோவிற்குள்ளேயே சிக்கிக்கொண்டனர். இந்த தீ விபத்தில் ஆட்டோவில் பயணித்த 8 பேரும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார், மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# மயிலாடுதுறை அருகே கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல்



மயிலாடுதுறை , ஜூலை.1–

மயிலாடுதுறை அருகே மாப்படுகை-சோழம்பேட்டை சாலை செப்பனிடும் பணிக்காக தோண்டப்பட்டு பல மாதங்கள்கடந்தும்பணிகள் தொடங்கப்படாததைக் கண்டித்து, விவசாயிகள், கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறை தாலுக்கா மயிலாடுதுறையில் இருந்து கல்லணை செல்லும் சாலையில் மாப்படுகை தொடங்கி சோழம்பேட்டை வரை சாலை செப்பனிடும் பணிக்காக கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் தோண்டப்பட்டது. ஆனால், அதன்பின் எந்த பணியும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அப்பகுதி மக்கள் பலமுறை முறையிட்டும் சம்பந்தப்பட்டதுறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த அப்பகுதி மக்கள் விவசாயி ராமலிங்கம் என்பவர் தலைமையில் நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிநிர்வாகிகளும்கலந்து கொண்டனர்.

இதையடுத்து, நெடுஞ்சாலைத்துறைஉதவி கோட்ட பொறியாளர் இந்திரன் மற்றும் மயிலாடுதுறைபோலீஸார் சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். முடிவில், சாலைப் பணிகளை நாளை தொடங்கி வருகிற 15-ஆம் தேதிக்குள் முடித்துத்தருவதாக அதிகாரிகள் எழுத்துப் பூர்வமாக ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மறியல் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த போராட்டத்தால் மயிலாடுதுறை-கல்லணை சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சீர்காழி நகராட்சி வளாகத்தில் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த கலை நிகழ்ச்சி



சீர்காழி, ஜூலை. 1 –

சீர்காழி நகராட்சி வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நகர மன்ற தலைவர் துர்கா ராஜசேகரன் தலைமை தாங்கினார். மேலாளர் காதுர்கான், சுகாதார ஆய்வாளர் செல்லதுரை ஆகியோர் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த விழிப்புணர்வுகளை கலைக்குழுவினர் செய்து காண்பித்தனர்.

மேலும் மக்காத குப்பையால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து எமன் வேடம் அணிந்த ஒருவர் செயல் விளக்கம் செய்து காண்பித்தார். முன்னதாக நகர்மன்றத் தலைவர் துர்கா ராஜசேகரன் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் பாஸ்கரன், முபாரக் அலி, கஸ்தூரிபாய், வித்யா தேவி, கள ஆய்வாளர் சீதாலட்சுமி, நகராட்சி பணியாளர்கள், மகளிர் குழுவினர், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# டாக்டர்.மீனாட்சி கல்வியியல் கல்லூரி ஆண்டு விழாவில் வட்டாட்சியர் பங்கேற்பு




தி.மலை, ஜூலை.1–

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த முறையாறு பகுதியில் உள்ள டாக்டர். மீனாட்சி கல்வியியல் கல்லூரியில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் பி.எட். இரண்டாம்ஆண்டுமுடித்த மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா டாக்டர். அருணாசலா அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டு விழா கல்லூரி நிர்வாகத்தின் தலைமையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்லூரியின் முதல்வர் பேராசிரியர்.பா.பழனி வரவேற்புரை ஆற்றினார். செங்கம் வட்டாட்சியர் சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர்கள் கி.பிரபு,இரா.ஏகாம்பரம் ப.கவிதா க.ஸ்டாலின் வே.ராஜேந்திரன் மு.ரமேஷ் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள்.

இந்த ஆண்டு விழாவில் இரண்டாம் ஆண்டு மாணவ ஆசிரியர்கள் இயல்,இசை,நாடகம், போன்றவற்றில் கலந்து கொண்டவர்கள் சண்முகசுந்தரி,கங்கா, ராஜ்குமார்,கோமதி, ப்ரிதா,சுஜிதா,சிவசங்கரி, முதலாம் ஆண்டு மாணவ ஆசிரியர்கள் சுபாஷினி, செண்பகம், சிந்து, விஜயசாதனா, ராஜேஸ்வரி,சாரீகாஜூம், பிரியதர்ஷினி, சிவரஞ்சனி, பவித்ரா, சல்மா, புவனேஸ்வரி, சேத்தனா, தீபிகா, இலாகிபேகம் மற்றும் தேவிபாலா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் இரண்டாம் ஆண்டு மாணவ ஆசிரியர்களை கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் வழி அனுப்பி வைத்தனர்.

### குமரி வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய

# திரிவேணி சங்கமத்தில் மீண்டும் புறகாவல் நிலையத்தை அமைக்க தமிழக வாழ்வுரிமை கட்சி கோரிக்கை



கன்னியாகுமரி, ஜூலை.1–

குமரி வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய திரிவேணி சங்கமத்தில் மீண்டும் புறகாவல் நிலையத்தை அமைக்க தமிழக வாழ்வுரிமை கட்சி கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழக வாழ்வுரிமை கட்சியின் கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் சோ.சுரேஷ் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார். அதில் முக்கடல் சங்கமிக்கும் புண்ணிய பூமியான குமரியில் துர்நாற்றம் தாங்காமல் மூக்கை பிடிக்கும் சுற்றுலா பயணிகள்.

தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் சர்வதேச சுற்றுலா தலமான குமரியில் சுகாதாரமற்று காணப்படும் நவீன உடை மாற்றும் அறை மற்றும் கழிப்பறைகளும், அதன் அருகிலேயே விற்கப்படும் தின்பண்டங்களால் வந்து செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடலில் கால் நனைப்பவர்களையும் குளிப்பவர்களையும் விபத்து ஏற்படாமல் கண்காணிக்கவும், தடுக்கவும் காவலர்கள் துரித நடவடிக்கை எடுக்க வசதியாக அந்த பகுதில் ஒரு புறங்காவல்நிலையம் அமைந்து இருந்தது. தற்போது அந்த புறங்காவல் நிலையம் இல்லாததால் அந்த பகுதியில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது.

மாவட்டநிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படும்முன் மாவட்டஆட்சியர் துரித நடவடிக்கை எடுத்து குமரி கடற்கரையில் மீண்டும் புறங்காவல் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்

# கொரோனா! கன்ட்ரோல் ரூம் திறந்துட்டாங்க...அபராதம் தீட்டுறாங்க!



கோவை , ஜூலை.1–

மக்கள் கூடும் இடங்களில், நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள மாநகராட்சி நிர்வாகம், 'மாஸ்க்' அணியாதவர்களிடம் இருந்து இதுவரை, 2.30 கோடி ரூபாய் அபராதம் வசூலித்துள்ளது; 'கன்ட்ரோல் ரூம்' மீண்டும் திறந்துள்ளது.

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக, கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதால், மாவட்டம், மாநகராட்சி நிர்வாகம் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. தற்போது, 'மாஸ்க்' கட்டாயமாக்கப்பட்டும் பொது இடங்களில் பலர் அலட்சியமாக இருப்பது, மூன்றாவது அலைக்கு வழிவகுத்துள்ளது.

எனவே, மாநகராட்சி நிர்வாகம் நோய் தடுப்பு அம்சங்களையும், கண்காணிப்பையும் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது

# பள்ளிகள் மற்றும் மருத்துவமனை எதிரே சாலையில் வேகத்தடை அமைக்கப்படுமா?



தி.மலை , ஜூலை.1–

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுகா மாமண்டூர் அரசினர் ஒன்றிய துவக்கப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் எதிரே உள்ள மெயின் ரோட்டில் வேகத்தடை அமைக்கப்படுமா என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காஞ்சிபுரம் - வந்தவாசி சாலையில் உள்ள மாமண்டூர் கிராமத்தில் அரசு ஒன்றிய துவக்கப்பள்ளி, அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே அருகே உள்ள நிலையில் காஞ்சிபுரம் - வந்தவாசி சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து இருந்த சாலையை சில வாரங்களுக்கு முன் சீரமைக்கப்பட்டது.

சாலையை சீரமைத்த பிறகு அந்த இடத்தில் வேகத்தடை அமைக்கப்படவில்லை. இதனால் சாலையில் லாரி, பஸ் மற்றும் பல்வேறு வாகனங்கள் அப்பகுதியில் அதிவேகமாக செல்கின்றன. இதனால் அப்பகுதியில் பள்ளிகள் மற்றும் மருத்துவமனை உள்ளதால் அதிக விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே மாமண்டூர் அரசுப் பள்ளி மற்றும் மருத்துவமனை எதிரே சாலையில் வேகத்தடை அமைக்க வேண்டும் என அப்பகுதிமக்கள்மற்றும்சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.




▶ திருவாரூர் பழைய பேருந்து நிலையத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் குழந்தைத்தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஓட்டுவில்லையை பேருந்தில் ஒட்டி மாவட்ட கலெக்டர் ப.காயத்ரி கிருஷ்ணன், விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# மணிப்பூரில் மாபெரும் நிலச்சரிவு 20க்கும் மேற்பட்டோர் பலி, பலர் மாயம்



மணிப்பூர் , ஜூலை.1–

மணிப்பூர் மாவட்டத்தில் ஏற்பட்ட மாபெரும் நிலச்சரிவில் 20க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். அம்மாநிலத்தில் மேற்கு பகுதியில் உள்ள நோனி என்ற மாவட்டத்தில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இங்கு, ஜிரிபாம்-இம்பால் பகுதியில் புதிய ரயில்வே திட்டம் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், துபுல் என்ற ரயில்நிலையம் அருகே தான் இந்த நிலச்சரிவு நிகழ்ந்துள்ளது. ரயில்வே கட்டுமானப் பணியில் 50க்கும் மேற்பட்டோர் இங்கு வேலை செய்து வந்துள்ளனர். திடீரென்று ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மீதமுள்ள நபர்களை மீட்கும் பணிகளை பேரிடரால் மேலாண்மை குழு மேற்கொண்டு வருகிறது.

மேலும் இந்த நிலச்சரிவானது அங்கு ஓடும் லேஜெய் என்ற நதிக்கு குறுக்கே ஏற்பட்டுள்ளதால், நதியின் ஓட்டம் தடைப்பட்டு தடுப்பணை போல் அப்பகுதி காணப்படுகிறது. எந்த நேரமும் இது தாழ்வான பகுதியில் வெள்ள பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால், அப்பகுதிக்கு அருகே சிறார்கள் யாரும் செல்ல வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும் அப்பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் மக்கள் அனைவரும் உஷார் நிலையில் இருக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த சம்பவத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி வருத்தம் தெரிவித்துள்ளார். அவர் தனது ட்விட்டர் பதிவில், 'முதலமைச்சர் பிரேன் சிங்கிடம் தொடர்பு கொண்டு பேசினேன். மீட்பு பணிகளுக்கு மத்திய அரசு அனைத்து விதமான உதவிகளையும் செய்ய தாயராக உள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்' என்றுள்ளார்.

மீட்புநடவடிக்கையை தொடர்ந்து கண்காணித்து வரும் மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங், அதிகாரிகளுடன் அவரச ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். காணாமல் போனவர்களை மீட்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ள முதலமைச்சர், முதலுதவி சிகிச்சை உடனடியாக கிடைக்க டாக்கடர்களுடன் கூடிய அம்புலன்ஸை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளார்.

மேலும், அந்த பகுதியை ஒட்டிய தேசிய நெடுஞ்சாலை என்எச்-37ஐ பயன்படுத்த வேண்டாம் என மக்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. மீட்பு பணியை துரிதப்படுத்த ராணுவ ஹெலிகாப்டர் தயார் நிலையில் இருந்தாலும், வானிலை ஒத்துழைக்காததால் ஹெலிகாப்படர் புறப்பட முடியாத சூழல் உள்ளது.




▶ மூன்றாம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் ஓட்டத்திற்கான முன்பதிவு நிகழ்ச்சி நேற்று மாலை 6 மணியளவில் சென்னை கிண்டியில் உள்ள அண்ணாப் பல்கலைக்கழகத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தமிழக காவல்துறை தலைவர் சி.சைலேந்திரபாபு மாரத்தான் இணையதளத்தையும், அதற்கான முன்பதிவையும் தொடங்கி வைத்தார்.



▶ சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் வன்கொடுமை விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ப.மதுசூதன் ரெட்டி, தலைமையில் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்றது.



▶ முதலமைச்சர் கரூர் மாவட்டம் வருகை தொடர்பாக கலெக்டர் பிரபுசங்கர் விழா நடைபெறும் இடத்தில் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக பார்வையிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## சமூக ஊடகங்களில் வந்தது

# அரசு வைத்த தேர்வில் வெற்றி பெற்ற ஆசிரியர்களின் நிலை என்ன?மு.கீதா

ஆசிரியப் பணி என்பது வியாபாரம் அல்ல...

அதுஅர்ப்பணிப்புடன் தன்னைத்தானே ஒப்புவித்து செய்யும் பணி...அது மழலைகளின் இரைச்சலைஇசையாக்கும் இசைக்கலைஞனின் லாவகத்தோடு செய்யும் பணி. இயந்திரங்களை ஆன் ஆஃப் செய்வதல்ல...

இயந்திரங்களை உருவாக்கும் மாணவர்களைச் செதுக்கும் பணி. இன்று சமூகம் ஆசிரியர்களை இழிவாகக் காணும் தோற்றத்தை உருவாக்கியவர்களை உருவாக்கியப்பணி .

எளிதாக ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களைப்போட்டு அரசு இனி நீவேண்டாம் போ என்றால் போக வைக்கலாம் என்ற எண்ணமே தவறு. ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்களின் குழந்தைகள் இணைந்து வாழ முடியாத இக்காலத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பைச் சுமப்பவர்கள் ஆசிரியர்கள்.

எனது35ஆண்டுகாலப் பணியில் கிராமத்துக் குழந்தைகளுக்காக எனது கைப்பையில் வைக்கப்பட்ட மாத்திரைகளுக்கான பர்ஸ்இன்றும்இருக்கிறது என்றால்...அது அரசு தரும் ஊதியத்திற்காக இல்லை. எனது முதல் ஊதியம் ரூ 300... ஆனால் பள்ளியில் அதற்கு மேலும் செலவழித்த காலங்கள் உண்டு.

இன்றும் கண்ணுக்கு தெரியாமல் நிறைய ஆசிரியர்கள் குழந்தைகளுக்காக அனைத்துஉதவிகளையும் செய்து வருகிறார்கள்... ஊடகங்கள் நல்ல ஆசிரியர்களை குறைந்த வெளிச்சத்தில் அடையாளம் காட்டுகிறது... ஒவ்வொரு ஊரிலும் சிறப்பாக செயல்படும் ஆசிரியர்களை எத்தனை பேருக்குத் தெரியும். அதிகாரிகள் அவர்களுக்கான அங்கிகாரத்தை தந்து உள்ளார்களா? இதை எல்லாம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறும் ஆசிரியர்கள் செய்ய இயலுமா? எப்போது வெளியே போவோம் என்று அச்சத்திலேயே அவர்கள் பணி செய்யும் நிலை சரியானதுதானா! அரசு வைத்த தேர்வில் வெற்றி பெற்ற ஆசிரியர்களின் நிலை என்ன? அவர்களின் கனவில் மண்ணை அள்ளி போடவா அரசு.58 ஆண்டு ஓய்வு பெறும் ஆசிரியர்களின் பணியிடத்தில் இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களை நியமித்து ஊதியம் வழங்க முடியும் என்ற நிலையில் ஏன் அவர்களுக்கு 60-62 என வயதை ஏற்ற வேண்டும்... அரசுப் பள்ளி குரலற்றவர்களின் குழந்தைகள் படிக்கும் இடமல்லவா! அரசு கொஞ்சம் யோசித்து செயல்பட வேண்டும்.. என்பதே பல ஆசிரியர்களின் கோரிக்கை...




# கூடுதல் வசூல் டாஸ்மாக் பணியாளர்களை அலறவிட்ட பாஜக

# தற்காலிக ஆசிரியர் பணி நியமனம் ரத்தாகிறது





# மகாராஷ்டிரா முதல்வராக பதவியேற்றார் ஏக்நாத் ஷிண்டே

சென்னை / புதுக்கோட்டை | 01.07.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

01.07.2022 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

புலவர் குழந்தை , தமிழகத் தமிழறிஞர், புலவர் (பி.1906) (இ.1972)



வசந்தராவ் நாயக் , மகாராட்டிராவின் 3வது முதலமைச்சர் (பி.1913) (இ.1979)



சந்திரசேகர் , இந்தியாவின் 11வது பிரதமர் (பி.1927) (இ.2007)



துரைமுருகன் , தமிழக அரசியல்வாதி, வழக்கறிஞர் (பி.1938)



வெங்கையா நாயுடு , இந்திய அரசியல்வாதி (பி.1949)



## இன்றைய நினைவு நாள்

பிதான் சந்திர ராய் , மேற்கு வங்கத்தின் 2வது முதலமைச்சர் (பி.1882) (இ.1962)



## தேசிய மருத்துவர்கள் நாள் (இந்தியா)